Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 339
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 22 ஷஃபான் 5 புதன்கிழமை [8-11-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சோவியத் 50வது அக்டோபர் புரட்சி விழா

# மாஸ்கோவில் மாபெரும் ராணுவ அணிவகுப்பு

## நவீன போர்க் கருவிகளுக்கு பவனியில் முக்கிய இடம்

மாஸ்கோ, நவ. 7

அக்டோபர் புரட்சியின் 50-வது ஆண்டுவிழாவை யொட்டி இன்று மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் மாபெரும் ராணுவ அணிவகுப்பு ஒன்று நடைபெற்றது.

எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் மகா வல்லமை பொருந்திய மாபெரும் நவீன போர்க் கருவிகளும் இந்த அணி வகுப்பில் இடம்பெற்றன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நவீன ஏவாயுதங்களும காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

பூமியின் எந்த இடத்திலும் ஜலவாயுக் குண்டுகளை வீசக்கூடிய சாதனங்கள் பொருத்தப்பட்ட பயங்கர கருவிகளும் இந்த அணி வகுப்பில் காணப்பட்டன.

சோவியத் நாட்டின் பாதுகாப்பு மந்திரி திரு. கிராட்ஸ்கோ உரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து ராணுவ ஊர்வலம் ஆரம்பமாயிற்று.

சோவியத் அக்டோபர் புரட்சியின் 50-வது ஆண்டு விழாவையொட்டி அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்சன் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

### பீகிங்கில்

சோவியத் அக்டோபர் புரட்சியையொட்டி இன்று பீகிங்கில் கூட்டம் ஒன்றில் சீன பாதுகாப்பு மந்திரி திரு. லிம்பியா பேசிய போது சோவியத் அரசாங்கமும், திரிபுவாதிகளான தலைவர்களும், கம்யூனிஸத்துக்கும், சோவியத் மக்களுக்கும் மாபெரும் துரோகம் செய்துவிட்டார்கள் என்றார்.

## 'திரிபுவாதிகள் ஆட்சி நீடிக்காது''

### மாசேதுங் செய்தி

50-வது சோவியத் புரட்சியையொட்டி பீகிங் வானொலி சீனத் தலைவர் மாசேதுங்கின் செய்தியொன்றை ஒலிபரப்பியது. அதில் அவர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

சோவியத் ரஷ்யா முதலாவது சோசலிஷ நாடு. சோவியத் கம்யூனிஸக் கட்சி தோழர் லெனினால் ஆரம்பிக்கப்பட்டது. சோவியத் நாட்டின் ஆட்சித் தலைமை இப்போது திரிபுவாதிகளால் அபகரிக்கப்பட்டிருந்த போதிலும் கட்சியின் ஊழியர்களும மக்களும் நல்லவர்கள. திரிபுவாதிகளின் ஆட்சி தொடர்ந்து நீடிக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கும்படி அறிவுரை கூறுகின்றேன்.

## கல்வி அமைச்சரை சந்திப்பர்

கொழும்பு, புதன்

அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின் சம்மேளன தூதுகோஷ்டி இன்று கல்வி மந்திரி திரு ஐ எம்.ஆர்.ஏ. இரியகொல்லையைச் சந்தித்து சம்மேளனத்தின் 12 கோரிக்கைகள்பற்றி பேச்சு வார்த்தை நடாத்தும்.

அகில இலங்கை ரீதியில் அமைந்துள்ள பதினொரு ஆசிரிய சங்கங்களைக் கொண்ட இச்சம்மேளன தூதுகோஷ்டிக்கு ஆசிரியர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமை தாங்குவார்.

ஆசிரியர் சம்பந்தமான சில முக்கிய பிரச்னைகளை ஆராய்ந்து முடிவுகள் எடுப்பார்கள் என நம்பப்படுகிறது.

## பிரதமர் - தமிழரசு தலைவர்கள் பேச்சு

### நள்ளிரவு வரை நீடிப்பு

கொழும்பு, செவ்வாய்

பிரதமர் டட்லி சேனநாயக்காவைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் இன்றிரவு 9-30 மணிககு கொழும்பு வூட்லன்டியிலுள்ள பிரதமரின் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள். தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம, நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி.நாகநாதன், உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் ஆகியோர் இப்பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். நள்ளிரவு வரை பேச்சுவார்த்தை நீடித்தது. அதி முக்கிய பிரச்னைகள்குறித்துபிரதமருடன் தலைவர்கள் பேசிக் கொண்டதாகத் தெரிகிறது. இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருந்தது.

## திருமலை துறைமுகத்தில் வெளியாருக்கு இடமில்லை

### ஜி. ஜி. க்கு பிரதமர் உறுதி

கொழும்பு, செவ்.

திருகோணமலை துறைமுகத்தில்அப்பகுதி மக்களுக்கே வேலைவாய்ப்புகள் கொடுக்கப்படும். வெளியிடங்களிலிருந்து ஆட்கள் எடுக்கப் படமாட்டார்கள்.

இன்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா தம்மைச்சந்தித்த யாழ்ப்பாணம் எம். பி. திரு.ஜி.ஜி. பொன்னம்பலத்திடம் மேற்கண்ட வாக்குறுதியைஅளித்துள்ளார்.

அருள்மலைப் பகுதியை இந்துமக்களுக்கு கொடுத்து [illegible] உறுதிய [illegible]

யாழ்ப்பாணம் மாநகர சபைத்தேர்தல்பற்றி திரு. பொன்னம்பலம் பிரதம மந்திரியிடம் பிரஸ்தாபிக்கையில் மார்ட்டின் கமிஷன் அறிக்கை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்றும், அதற்கு கடும் எதிர்ப்பு உண்டென்றும் தெரிவித்தார்.

தமிழ்பேசும்மக்கள் சம்பந்தமாக பல்வேறு விஷயங்கள் குறித்தும் பிரதமருடன் திரு. பொன்னம்பலம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

55 வயதுக்குப் பிறகும் சேவையில் நீடிக்கவிரும்பும் அரசாங்க ஊழியர்களுக்கு

[8-ம் பக்கம் பார்க்க]

1. யானை மார்க் நம்பர் 1 சிமென்ஸ
ஓடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சிமென்ஸ்.

2. சிமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்கா யெண்ணையும் ஆமணக்கெண்ணை கூந்தல் வளரும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்
தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஒளஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சிமென்ஸ் பற்பொடி: தினமும் சிமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.
ஒரு பாக்கெட் 60 சதம்,

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:
சிமென்ஸ் கடுக்காய் குளிகைகள்
இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1/20, தபால் செலவு 60 சதம்.

சிமென்ஸ் ஓடிகொலோன்
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25
சிமென்ஸ் ஆமணக்கெண்ணை கூந்தல் தைலம்
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-50
சிமென்ஸ் செவ்விளநீர் தேங்காயெண்ணை கூந்தல் தைலம்
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
சிமென்ஸ் பற்பொடி
1 பாக்கெட் -/60 சதம்
சிமென்ஸ கடுக்காய் குளிகைகள்
100 குளிகை போத்தல் ரூ. 3-50
250 குளிகை போத்தல் ரூ. 8-50
500 குளிகை போத்தல் ரூ. 15-00
சிமென்ஸ புத்தராஜ தைலம்
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-35
6 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-25
வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள்

சிமென் பிரதர்ஸ்,
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

சுருவில் ப. நோ. கூ. சங்கம்

### தேவை: மனேஜர்

தராதரம்: கூட்டுறவுப் பயிற்சி.

சம்பளம்: ரூபா 150/- சகல படிகளுமுட்பட.)

மனேஜரே இச்சம்பளத்தில் உதவியாளரையும் வைத்துக்கொள்ளவேண்டும்

பிணை: ரொக்கம் ரூபா 1000/-, ஆதனம்ரூபா4000/- 20-11-67-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தலைவர்
சுருவில் ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை. 318

---

சாவகச்சேரியில்
### காணி விற்பனை

ஏழுபரப்பு [தென்னமரங்களுடன்] சாவகச்சேரி—மருத்தித்துறை வீதியில், தபால் கந்தோருக்கும் மகளிர் மகா வித்தியாலயத்துக்கும் இடையிலே, வித்தியாலயத்திலிருந்து சுமார். இருபத்தைந்துயார் தூரம்.—சி. க.தேவராஜன், ஆனைக்கோட்டை. (தபால் கந்தோருக்கு அருகில்) 313

---

## மாத்தறையில் இன்று நகரசபைகள் மகாநாடு

கொழும்பு. செவ்.

நாளை மாத்தறையில்நடைபெறும் அகில இலங்கைநகர சபைகள் மகாநாட்டில் பிரதமர் திரு. டல்லி சேனநாயகா சொற்பொழிவாற்றவிருக்கிறார்.

ராஜாங்கஅமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், மராமத்துஅமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமா ஆகியோரும் இம்மகாநாட்டில் உரைநிகழ்த்தவிருக்கிறார்கள். மாத்தறை ராகுல கல்லூரியில் இம் மகாநாடு நடைபெறவிருக்கிறது.

## நீரைத்தேக்க நடவடிக்கை

சுழிபுரம், செவ்வாய்

பொன்னாலைக் குளத்தில் உள்ள நீரைத்தேக்கி வைக்க ஒரு புதியதிட்டத்தைஇளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. அ. தையல்பாகர் ஜே. பி. அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ளார்.

இத்திட்டம் சம்பந்தமான வேறு விபரங்களையும் நீர்ப்பாசனப் பகுதியினர் திரு. அ. தையல்பாகரிடம் இருந்துபெற்றுள்ளதாகத்தெரிய வருகிறது.

---

கடன்
## வழங்குவதில் பாரபட்சம்

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை — வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கு விவசாயக் கடன் கொடுக்க விண்ணப்பம் கோரியது. இக் கடன் விண்ணப்பித்த ஒரு சிலருக்கே கடன் கொடுக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. ஒரு சிலரின் விண்ணப்பம் காரணமின்றி நிராகரிக்கப்பட்டுள்ளமையையிட்டு புகார் கூறப்பட்டுள்ளது.

ஆலய பிரவேச
## வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

அச்சுவேலி உலசவிக்குளப் பிள்ளையார் கோயில் ஆலய பிரவேச வழக்கு நேற்று முன்தினம் காலை மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மாஜிஸ்திரேட் விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ் வழக்கில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கணேஸ் என்பவரை, இவ் வருடம் ஜூலை மாதம் 12-ம் திகதி ஆலயத்தின் உள்ளே சென்று வழிபடவிடாது தடுத்ததாக கோயில் முகாமையாளரான குமாரவேலு என்பவர் மீது காங்கேசன் துறை பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

## நலவிருத்திக் கழக உறுப்பினர்

கோண்டாவில், செவ்.

கோண்டாவில் நலவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் குமரகோட்டம் வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது தலைவராக திரு. செ. திருநாவுக்கரசுவும், செயலாளராக திரு. ச. யோகராசாவும், பொருளாளராக திரு. செ. விருத்தாசலமும் தெரிவு செய்யப்பட்டனர். 15 உறுப்பினர்களை உள்ளடக்கிய செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பிரிட்டனில்
## இலங்கை வானொலி அதிகாரி

லண்டன், நவ. 7

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அண்மையில் பிரிட்டனில் டெலிவிஷன், வானொலி.பற்றிய 5 மாதப் பயிற்சித் திட்டத்தை பூர்த்திசெய்துள்ளார். கடந்த மே மாதம் பிரிட்டனுக்கு விஜயம் செய்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காரியதரிசி திரு. ஜி. எச். ஜெயசூரியா இம்மாதம் 26-ம் திகதி தாயகம் திரும்புகிறார்.

திரு. ஜெயசூரியா, லண்டனிலுள்ள பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் [பி. பி. ஸி] பயிற்சி நிலையத்தில் தமது பயிற்சியை மேற்கொண்டார். பிரிட்டனின் மற்றும் பிரதான நகரங்களிலுள்ள டெலிவிஷன் நிலையங்கள், லண்டனிலுள்ள மத்திய தகவல் காரியாலயம் போன்ற இடங்களுக்கும் அவர் விஜயம்செய்தார்.

---

தேசிய உப்பு கூட்டுத்தாபனம்
## ஆனையிறவு சேர்க்யூட் பங்களா மேற்பார்வையாளர் பதவி

ஆனையிறவு சேர்கியூட் பங்களா மேற்பார்வையாளர் பதவிக்கு ஆனையிறவு, தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், வடபகுதி பிராந்திய மனேஜரால விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2. விண்ணப்பம் செய்வோர் இலங்கைப்பிரஜைகளாகவும், ஒரு நன்கு ஸ்தாபிக்கப்பட்ட போஜன சாலையில் மேனுட்டு, கீழ் நாட்டு உண்டி வகை தயாரிப்பதில் குறைந்த பட்சம் ஐந்து [5] வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பம் செய்வோர் தங்கள் விண்ணப்பங்களில் வயது, கல்வி தராதரம் முதலியவற்றைக் குறிப்பிட்டு அவற்றுடன் சமீபத்தில் எடுத்த நற்சாட்சிப் பத்திரங்களின் இரண்டு பிரதிகளையும் அனுப்பவேண்டும். இவற்றில் ஒன்று தற்சமயம் வேலை பார்ப்பவரிடமிருந்து எடுக்கப்படவேண்டும்

4. விண்ணப்பங்கள் முடிவு திகதி 15-11-67.

5. நியமனம் நியமிக்கப்படும் திகதியிலிருந்து ஆறு [6] மாத காலத்திற்குத் தற்காலிகமானது. இத்தவணைக்குள் நாளொன்றுக்கு மொத்த சம்பளம் ரூபாய் 5/- வழங்கப்படும். ஆறு (6) மாதம் திருப்தி கண்டபின் மொத்தச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூபா 140/-, 4X5, ரூபாய் 160/-

ஒப்பம் [எஸ். கனகநாயகம்]
உதவி பிராந்திய மனேஜர் (வடபகுதி),
317 தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்.

---

## கேள்வி விளம்பரம்

### சுன்னுகம் சந்தையில் நாலு அறை கொண்ட கடை கட்டுதல்

மேல் குறிப்பிட்ட வேலைக்கு சீல் வைத்த உறைகளில் கேள்விப்பத்திரங்கள் சுன்னுகம் சட்டண சபைத் தலைவரால் 18-11-67-ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

16-11-67-ம் திகதி பி. ப. 2-30 மணிவரை வைப்புப் பணமாக ரூபா 50/-ம் பத்திரப்பணமாக ரூபா 5/-ம் செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப்பணமாக கட்டப்படும் ரூபா 5/- திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

ஏனைய விபரங்களை சுன்னுகம் பட்டண சபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்
பட்டணசபை, சுன்னுகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னுகம், 5-11-67. 315

---

## வரி விளம்பரம்

### தேவை

**அச்சுக்கோர்ப்பவர்கள்**

மூன்று வருட அனுபவத்துடனுள்ள அச்சுக்கோர்ப்பவர்கள் தேவை. பத்திரிகையில் வேலைசெய்த அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்றபடிசம்பளம் வழங்கப்படும். தெரிவுக்கு முன்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விபரங்களுக்கு விளம்பர இல.2111,மே/பா 'ஈழநாடு' என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2111

**சாரதி**

ட்ராக்டர், புல்டோசர் சாரதிகள் தேவை. விண்ணப்பிக்கவும். ஜி. ஜனார்த்தனன், 135, மீதோட்ட முல்லை ரோட், வெல்லம்பிட்டியா. 2109

**மெக்கானிக்**

டீசல் ட்ராக்டர்களுக்கும் புல்டோசர்களுக்கும் மெக்கானிக்மார் தேவை. ஜி. ஜனார்த்தனன், 135, மீதோட்டமுல்லை ரோட், வெல்லம்பிட்டியா. 2110

காலையில் பகுதிநேர வேலைக்கு, பத்திரிகை விநியோகம் செய்யும் பையன்கள் தேவை. சொந்தமாகச் சைக்கிள் வைத்திருந்தால் விரும்பத்தக்கது, வயது கல்வித் தராதரம் ஆகிய விபரங்களைக் குறித்து 15-11-67க்கு முன் விண்ணப்பிக்கவும். 'ஈழநாடு' லிமிடெட். 2112

### விற்பனைக்கு

பழைய ஆங்கில, தமிழ்ப் புதினப் பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள், வார நாட்களில் பிற்பகல் 3 மணிக்கும் 5 மணிக்குமிடையே 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்து தொடர்புகொள்ளலாம். 2113

---

**REGAL** JAFFNA
Daily at
4-45 7-00 And
9-45 p. m. Only
Holidays at 10 a. m.
A STUDY IN TERROR
(Adults only)

---

**நியூ** [illegible]
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**காத்தவராயன்**
[புதியகொப்பி]

---

**மனோகரா**
யாழ்ப்பாணம்
Dally at 2-30, 6-30, &
9-45 Pm
Pre Poya & Poya 10-30 am
தேவானந், சைராபானு,
சசிகலா நடித்த
**பியார் மொகபாட்**
**PYAR MOHABBAT**
ஹிந்தி (ஈஸ்ட்மன் கலர்)
இசை-சங்கர், ஜெயகிஷர்

---

### இப்பொழுது நடைபெறுகிறது

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு

**பிளாஸா** [வெள்ளவத்தை]
**கெப்பிட்டல்** [கொழும்பு]
**மைலன்** [கொட்டாஞ்சேனை]
**விஜயா** [மட்டுநகர்]
**ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

**எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்**

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.



மற்றும்
ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த

தேவர் பிலிம்ஸ்

# முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

---

**6-வது வாரம்**

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **லக்ஷ்மி** [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனு — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற

## குழந்தையும் தெய்வமும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'வியட்னும் போர் விரைவில் நிறுத்தப்படவேண்டும்'

## இந்தியாவில் முன்னுள் அமெரிக்க தூதுவராக இருந்த திரு. கல்பிரெயித்

சிக்காகோ, நவ. 7

வியட்னுமில் அமெரிக்கா தற்பாதுகாப்புப்போர் நடத்தவேண்டுமென்றும், வட வியட்னும் மீது குண்டு வீச்சை நிறுத்தவேண்டும் என்றும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அடிகோலவேண்டும் என்றும் இந்தியாவில் முன்பு அமெரிக்கத் தூதுவராக இருந்த திரு. கல்பிரெயித் கூறியுள்ளார்.

இல்லினெயில் நகரின் சுயேச்சை வாக்காளர்கள் கூட்டத்தில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார்.

**'நிர்ப்பந்தம் செய்யவேண்டும்'**

காலஞ்சென்ற ஜனதிபதி பதி திரு. கென்னடியின் பொருளாதார ஆலோசகராகச் சிறிதுகாலம் இருந்த, திரு. கல்பிரெயித் மேலும் கூறியதாவது: "வியட்னும் போரை நிறுத்தும்படியான நிர்ப்பந்தத்தை ஜோன்சன் அரசுக்கு நாம் உண்டுபண்ணவேண்டும். வியட்னும் போரைத் தாம் எதிர்ப்பதாக அமெரிக்க மக்களில் பாதிப்பேர் கூறிவிட்டால், அரசியல்வாதிகள் ஒரு தீர்வு காணுவார்கள்."

வியட்னும் போர் விரைவில் நிறுத்தப்பட்டால்தான், அமெரிக்க பொருளாதாரம் பிழைக்கும் என்றும் திரு. கல்பிரெயித்குறிப்பிட்டார்.

## கருவழிக்கும் அதிசய இயந்திரக் கருவி

புதுடில்லி, நவ. 7

கருவழிக்கும் ஒரு அதிசய இயந்திரக் கருவியை இங்குள்ள சோவியத்தூதுவர் திரு பெகோவ், நேற்று முன்தினம், இந்திய மத்திய அரசின் சுகாதார, குடும்பக்கட்டுப்பாடு மந்திரி டாக்டர் சந்திரசேகரனிடம் கொடுத்தார்.

சத்திர சிகிச்சை மூலமாக ஏற்படும் சோர்வு அல்லது களைப்பு, இந்த இயந்திரக் கருவியை உபயோகிப்பதால் பிணியாளர்களுக்கு ஏற்படுவதில்லை. இதர சத்திரசிகிச்சை முறைகள் மூலமாகக் கருவழிக்கப்படும் பெண்கள் ஆஸ்பத்திரியில் சில நாட்கள் தங்க வேண்டியிருக்கும். ஆனுல் இந்த இயந்திர சாதனத்தைக்கொண்டு எல்லா வசதிகளும் உள்ள ஆஸ்பத்திரிகளில் சத்திரசிகிச்சை செய்துகொள்ளும் பெண்கள், சிகிச்சைநடைபெற்ற சில மணி நேரத்தில், ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்துவிடலாம்.

இந்த இயந்திர சாதனம், ரஷ்யாவிலும் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பரவலாக உபயோகிக்கப்படுகிறது. அந்த நாடுகளில் கருச்சிதைவு சட்டபூர்வமாக அனுமதிக்கப்படுகிறது.

# பறக்கும் தட்டுகள் எங்கிருந்து வருகின்றன?

மெயின்ஸ், நவ. 7

"உலகம் முழுவதிலும் அவ்வப்போது தென்பட்டு வந்திருக்கும் 'பறக்கும் தட்டுகள்' பூமியில் வாழும் மனிதர்களைப் பார்க்கிலும் நாகரிகத்தில் மிகவும் முன்னேறியுள்ளவர்கள் வசிக்கும் கிரகங்களிலிருந்துதான் வருகின்றன' என்று பிரபல ரொக்கெட் நிபுணரான திரு. ஹெர்மன் அபரித் தெரிவித்துள்ளார்.

அடையாளம் கண்டு கொள்ள முடியாத 'பறக்கும் தட்டு'களைப் பற்றி விவாதிப்பதற்காக நடைபெற்ற நிபுணர்கள் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

"பறக்கும் தட்டுகள் அண்மையிலுள்ள கிரகங்களிலிருந்து வருவதாக நான் கருதவில்லை. சூரிய மண்டலத்துக்கும் அப்பாலுள்ள கிரகங்களிலிருந்து தான் பறக்கும் தட்டுகள் வந்து கொண்டிருப்பதாகக் கருதுகிறேன். அந்தக் கிரகங்களிலுள்ள மக்கள், வாழ்க்கையை நீடிக்கச் செய்வதற்குரிய விஞ்ஞான முறைகளில் கைதேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று கூறினர் என்று திரு. ஹெர்மன் அபர்த் மேலும் ரிதகிறது".

# பிலிப்பைன்ஸ் சூறுவளியில் 27 பேர் மாண்டனர்

மணிலா, நவ. 7

பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் அடித்த பெரும் சூறுவளியில், குறைந்த பட்சம் 27 பேர் இறந்திருப்பர். போக்குவரத்து துண்டிக்கப்பட்ட இடங்களிலிருந்து முழுத் தகவல்கள் கிடைத்தால், உயிர்ச்சேதம் இன்னும் அதிகமாயிருக்கும். 21 மாகாணங்களில் பயிர்களுக்கும் பொருட்களுக்கும் பெரும் சேதம் விளைந்திருக்கிறது.

மத்திய பிலிப்பைன்ஸில் உள்ள இலோயிலா நகரில் ஒரு பழைய பாலத்திலிருந்து ஒரு பஸ் விழுந்து, அதிலிருந்த 26 பிரயாணிகளும் மூழ்கி விட்டனர்.

# காங்கிரஸ் தலைவர் பதவியை இவர் விரும்பவில்லை!

பங்களூர், நவ. 7

"நான் காங்கிரஸ் அக்கிராசனராக இருக்கப்போவதில்லை" என்று மைசூர் முதல்மந்திரி திரு. நிஜலிங்கப்பா அறிவித்துள்ளார்.

இது நிச்சயம் என்றுஅவர் சொன்னர். டில்லியிலுள்ள தமதுநண்பர்களுக்குஇதைத் தாம் தெளிவாக்கிவிட்டதாகவும், அவர்களுக்குத்தமது மனேநிலை நன்கு தெரியுமென்றும் திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

இம்மாதிரி முடிவு செய்ததற்குக்காரணமென்ன என்று கேட்டதற்கு அந்தப்பதவிக்குத் பொருத்தமானவரல்லஎன்று அவர் பதிலளித்தார்.

யார் அடுத்த காங்கிரஸ் அக்கிராசனராக வருவார் என்று சொல்வது மிகக்கடினம் என்றும் அவர்சொன்னர்.

# உலகிலேயே வேகமான விமானம் சந்திரனின் நிழலைத் துரத்தும்

## 1970-ல் இது நடக்கும்

வாஷிங்டன், நவ. 7

உலகிலேயே மிக வேகமான ஆகாய விமானமான 'லொக்ஹீட்' வை எவ்-12 ஏ 1970-ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் சூரிய கிரகணத்தின் போது, அமெரிக்காவின் கிழக்குப் பகுதியோரமாக, சந்திரனின் நிழலைத் துரத்திச் செல்லும்.

பூமிக்கு ஏறத்தாழ 16 மைலுக்கு மேலாக, ஒலியின் வேகத்தைவிட மூன்று மடங்கு அதிகமான, மணிக்கு 2000 மைல் என்ற வேகத்தில், இவ் விமானம் பறந்து செல்லுமாதலால், அதே வேகத்தில் செல்லும் சந்திரனின் நிழலுக்கு விமானம் ஈடு கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

சந்திரனின் நிழலை 'லொக்ஹீட்' விமானம் இவ்வாறு பூமிக்கு 16 மைல் உயரத்தில் துரத்திச் செல்லும் போது, வான சாஸ்திரத்தின் பல அம்சங்கள் ஆராயப்படும் எனத் தெரிகிறது.

# நபிகள் நாயகத்தின் 1400-வது ஆண்டு விழா

## சென்னையில் கொண்டாடப்பட்டது

சென்னை, நவ. 7

நபிகள் நாயகம் தீர்க்கதரிசியான 1400வது ஆண்டு விழா, சென்னையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. இதையொட்டி ஆயிரம் விளக்கு மசூதியில் நடைபெற்ற கூட்டத்துக்குச் சுகாதார மந்திரி திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா தலைமை வகித்தார். அவர் தமது உரையில் தி. மு. கழகம் நாத்திகக் கருத்துடைய இயக்கம் அல்ல என்றுர். 'ஒருவனே தேவன்' என்பது தான் தி. மு. க. வின் கொள்கை. இக்கொள்கை நபிகள்நாயகத்தின் கொள்கைக்கு ஒத்திருக்கிறது என்றும் அவர் கூறினர்.

கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், மதத்தின் பெயரால் கலவரங்களும் சண்டைகளும் நடந்துள்ளவற்றைப் பற்றிக் குறிப்பிட்டார். மதங்களின் அடிப்படைத் தத்துவங்களை உணர்ந்து கொள்ளாததன் விளைவாகத்தான் இக்கலவரங்களும், சண்டைகளும் நடந்துள்ளன என்றும் அவர் சொன்னர்.

## தென் சென்னை உபதேர்தல்

### இன்று மாலை முடிவு

சென்னை, நவ. 7

தென் சென்னை பார்லிமெண்ட் தொகுதி உபதேர்தலில், வாக்குகளை எண்ணுவது நவம்பர் 8-ம் திகதி காலை 8 மணிக்குத் தொடங்கும் என்று சென்னை கார்ப்பரேஷன் கமிஷனரும், தேர்தல் அதிகாரியுமான திரு. ஜே. அம்பாசங்கர் அறிவித்துள்ளார்.

துரிதமாக எண்ணும் பொருட்டு, இரு இடங்களிலும், அதாவது நேரு ஸ்டேடியத்திலும், பச்சையப்பன் கல்லூரியிலும் வாக்குகள் எண்ணப்படும் என்று அவர் சொன்னர்.

மாலையில் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. என்றும் அவர் கூறினா.

## ரஷ்யாவில் காசு மழை!

மாஸ்கோ, நவ. 7

ரஷ்யாவில் அண்மையில் பெரும் புயற்காற்றோடு மழை பெய்ததில் வானத்திலிருந்து 1000 வெள்ளிக் காசுகள் [illegible] கொட்டின. இத்தகவலை ரஷ்ய செய்தித்தாபனமொன்று வெளியிட்டது. இந்தக் காசுகள் 'ஐவான் தி டெரிபிள்' காலத்தவை எனக் கருதப்படுகிறது.

பேய்க்காற்று வீசியபோது ஒரு குன்றிலிருந்து இந்தக் காசுகள் வானத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

## பிரிட்டனில் மாணவர் பத்திரிகை

லண்டன், நவ. 7

"மாணவர் வாழ்க்கை" என்ற பெயரில் பிரிட்டனில் முதன் முதலாக தேசியசெய்திப் பத்திரிகை ஒன்று தற்போது வெளியிடப்படுகிறது. பிரிட்டனில் இருக்கும் 554,000 மாணவரிடையே இப்பத்திரிகை விநியோகிக்கப்படும். இங்கிலாந்தில்மட்டுமல்லாது, வேல்ஸ் ஸ்கொட்லந்து, வட அயர்லந்து, அயர்லந்துக் குடியரசு ஆகிய இடங்களிலுள்ள உயர் கல்விக் கல்லூரிகளுக்கும் இது அனுப்பப்படும்.

ஒரு சர்வகலாசாலையில் இருக்கும் மாணவர்கள், மற்றைய சர்வகலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்குடனேயே இத்தேசிய பத்திரிகை வெளியிடப்படுகிறது.

## 14 வருடத்தில் 14 வேலைகள்

கொழும்பு, செவ்.

இலங்கை கொன் சொலிடேற்ஸ் ஏற்றுமதி கம்பனியின் தலைவராக அரசாங்க கார்ப்பரேஷன்களின் தலைவர் திரு. டி. பி. ஐ. பி. சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க சேவையில் சேர்ந்த 14 வருடகாலத்தில் இவர் வகிக்கும் 14-வது பதவி இது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மேற்படி கம்பனி இலங்கையில் தயாரிக்கப்படும் பொருள்களை ஏற்றுமதிசெய்யும்.

## பஸ் சேற்றில் புதைந்தது

கொடிகாமம், செவ்வாய்

இன்று காலை கொடிகாமத்திற்கருகில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இ. போ. ச. பஸ் ஒன்று சேற்றில் புதைந்துவிட்டது. கடந்த ஒருவாரமாக கொடிகாமத்தில் தினமும் ஒரு பஸ் புதைந்து வருகிறது.

# தென் அரபிய சமஷ்டியின் ஒரேதேசியக் கட்சி

## தேசிய விடுதலை முன்னணியை இராணுவம் அங்கீகரித்துள்ளது

ஏடன், நவ. 7

தென் அரபிய சமஷ்டியின் இரு தேசியக் கட்சிகளான தேசிய விடுதலை முன்னணி, புளொஸி ஆகிய இரண்டிலும், தேதிய விடுதலை முன்னணியையே தான் அங்கீகரிப்பதாகத் தென் அரபிய சமஷ்டி இராணுவம் அறிவித்துள்ளது. அத்துடன், அக்கட்சியையே பிரிட்டனும் அங்கீகரிக்கவேண்டுமெனப் பிரிட்டனை அது கேட்டுள்ளது.

இந்த அறிவிப்பைத் தேசிய விடுதலை முன்னணி வரவேற்றுள்ளது.

இதற்கிடையில், இருகட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே சண்டை தொடர்ந்து நடைபெறுகிறது. கடந்த 4 தினங்களாக நடைபெற்ற இச்சண்டையில் 100 பேருக்குமேல் உயிரிழந்ததாகவும், 300 பேருக்குமதிகமானேர் காயமுற்றதாகவும் கூறப்படுகின்றது.

இரு தேசியக் கட்சிகளுக்கிடையேயான போராட்டத்தில், தென் அரபிய சமஷ்டி இராணுவம் அதிக பங்கு இப்போது ஆற்றிவருவதாகவும் [illegible] அது தேசிய விடு[illegible]யுடன் சேர்ந்து, புளொஸியை எதிர்க்கத் தொடங்கியுள்ளது.

### சிறையில் சன்னம் வைத்து தப்பினராம்

ஹைதராபாத், நவ. 7

இங்குள்ள மத்திய சிறையிலிருந்து 9 விசாரணைக் கைதிகள் தப்பியோடிவிட்டனர்.

சிறைச்சாலை சுவரில் சன்னம் வைத்து அக்கைதிகள் தப்பி சென்றுள்ளதா [illegible]திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இறைவனது நண்பனுக இருக்க விரும்புவோன் இவ்வுலகத்தில் தன்னந் தனியனுக இருக்கவேண்டும். இன்றேல் உலகம் முழுவதுடனும் நட்புரிமை கொள்ள வேண்டும்.

—காந்திமகான்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஇலு ஐப்பசிமீ 22உ (8-11-67)


## பல்கலைக்கழக மாணவர்

கொழும்பு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்த பல்கலைக்கழக மாணவர் நேற்று தங்கள் பகிஷ்காரத்தைக் கைவிட்டு வகுப்புகளுக்குத் திரும்பிச் சென்றனர். இப்பிரச்னையில் பிரதமர் தலையிட்டு வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்தே மாணவர் பகிஷ்காரம் முடிவடைந்திருக்கிறது. இப்பிரச்னை ஆரம்பமான சமயத்திலேயே பிரதமர் இதில் தலையிட வேண்டுமென நாம் இதே பத்தியில் எடுத்துக் கூறியிருந்தோம். அந்நேரமே பிரதமர் தலையிட்டு நடவடிக்கை எடுத்திருந்தால் மாணவரின்படிப்பு மூன்று வாரங்கள் வீணுகியிருக்காது; இதர பிரச்னைகளும் தோன்றியிருக்காது. என்ருலும் இந்நேரத்திலாவது பிரதமா நிலைமையைச் சுமுகமாகச் சமாளித்ததற்காக அவரைப் பாராட்டலாம்.

மாணவர் பகிஷ்காரம் தொடங்கியதும் அவர்களுக்குப் ''போராட்ட மனப்பான்மையை'' ஊட்டியது யார்? எதற்காக இத்தனை பிரச்னைகள் தோன்றின, யார் இதற்குக் காரணம்? இவை பற்றி பிரதமரும் மற்றையோரும் ஆராய்ந்து இனியும் இதுபோன்ற அனுவசியமான பிரச்னைகள் தோன்ருமல் தடுப்பது பிரதமருக்கும் அரசாங்கத்துக்கும் நாட்டுக்குமே நல்லது.

மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தது வெறும்பெயர்ப் பிரச்னை மட்டுமல்ல. பல்கலைக் கழகத்தின் பெயரில் அதன் அந்தஸ்தும் அதன் தரமும் தங்கியிருக்கிறது. அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் எதிர்காலம் அதன் அந்தஸ்தையேபெரிதும் பொறுத்திருக்கிறது. எனவே மாணவர்களின் கோரிக்கையில் நியாயம் இல்லையென்று யார்தான் கூற முடியும்?

'இலங்கைப் பல்கலைக் கழகம், கொழும்பு' எனவும் 'இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனை' எனவும் பெயர் சூட்டப்படவேண்டுமென்று பல்கலைக் கழக செனட் சென்ற ஜூன் மாதத்திலேயே தீர்மானித்து யோசனை தெரிவித்திருந்தது. தேசிய உயர்கல்விச் சபையும் இதே போன்று தீர்மானம் நிறைவேற்றி யோசனை தெரிவித்தது. கல்விமான்களும் ஸ்தாபனங்களும் மாணவர்களின் கோரிக்கை நியாயமான தெனத் தெரிவித்து இலங்கைப் பல்கலைக் கழகம் என்ற பெயரும் அதற்குரிய அந்தஸ்தும் கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கும் அளிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தனர்.

இதை ஒரே ஒருவர் மட்டும் எதிர்த்து; மாணவர்களுக்கு 'நல்லுரை' கூறி பகிஷ்காரத்தை கைவிட முயற்சி செய்தார். ஆனல் தமது தீர்மானத்தை மாற்றிக்கொள்ள முடியாதென அடம்பிடித்தார். அவர் தான் நமது கல்வி அமைச்சர். பல்கலைக் கழக மாணவர் விஷயத்தில் மட்டுமல்ல நாட்டின் கல்வி நிர்வாக முறையிலும் குழப்பமும் சிக்கலும் நிறைந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்ருேர்களுக்குமே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நிலைமையைச்சீர்செய்ய அவரே முன்வர வேண்டும்; இல்லையேல் அதற்கு இடையூருக இருக்காமல் வழி விட்டாவது கொடுக்க வேண்டும்.

# இலங்கையின் அரசியல் அ... உள்ளதில் மாறுதலா; பு...

## இருப்பதை எவரும் விரும்பவில்லை ஆயினும் தீர்வுக்கும் வழியில்லை

### 29-வது ஷரத்தையும் இழந்தால் சிறுபான்மையினர் நிலை என்ன?

எஸ். எம். ஜி.

இலங்கையின் அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதுபறறிஆராய்ந்துசிபார்சு செய்வதற்கென பார்லிமெணடின இருசபைகளையும் கொண்ட தெரிவுக்குழுவில் சேர்ந்து பணியாறற எதிர்க்கட்சியினர் மறுத்து விட்டனர்.

என்ருலும் எதிர்க்கட்சி அங்கத்தவாகளையும் கொண்ட ஜனப்பிரதிநிதிகள்சபை தெரிவுக்குழுவை ஜனப்பிரதிநிதிகள் சபை தெரிவுசெய்திருக்கிறது. பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட இந்தக்குழுவில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆறுபரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளது.

தெரிவுக்குழு நியமிக்கும் பிரேரணை முன்னர் ஒரு தட வகொண்டுவரப்படட போது எதிர்க்கட்சியினர் தாம் ஒத்துழைக்க முடியாதெனத் தெரிவித்தனர். அவர்கள் இப்போதைய அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதால் எதுவித பயனுமில்லையென்றும் புதிய அரசியல்அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தனர். இப்பிரச்னையில் இருதரப்பினருக்குமிடையில் ஒரு சமரசம் காண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனல் இதில் வெற்றி கிடைக்கவில்லை. ஆளும் கட்சியினர் அரசியல் அமைப்பைத்திருத்துவதுபற்றி ஆராய்வதற்கான தெரிவுக்குழு நியமிக்க வேண்டுமென்ற பிரேரணை கொண்டுவந்தனர். எதிர்க்கட்சியினர் புதிய அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டுமெனத் தனியாக ஒரு பிரேரணை கொண்டுவந்தனர்.

பார்லிமெண்ட் கூட்டத்தொடர் கலைக்கப்பட்டதால் அப்பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படாமலே காலாவதியாகிவிட்டது. ஆனல் ஆளும் கட்சியினர் அரசியல்அமைப்பைத் திருத்துவதுபற்றி ஆராய்வதற்கான தெரிவுக்குழுவை நியமிக்கும் பிரேரணையை தகுந்த சமயம் பார்த்துக் கொண்டுவந்துநிறைவேற்றி விட்டனர் இது ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் திறமைக்கும் சாதுரியத்துக்கும் ஒரு சான்ருக அமைந்துள்ளது என்று சொல்லலாம்.

இலங்கையை ஒருகுடியரசு நாடாக்கவும், செனட்சபை நியமன அங்கத்தவர்களின் எதிர்காலம்பற்றியும் அரசாங்க சேவைக்கமிஷன், நீதிபரிபாலனசேவைக் கமிஷன் ஆகியவை பற்றியும் அரசியல் அமைப்பைத் திருத்துவது பற்றி ஆராய்ந்துசிபார்சு செய்வதற்குத் தெரிவுக்குழு நியமிக்கப்படவேண்டுமென்பது ஆளும்கட்சியினர் நிலை.

இப்போதைய அரசியல் அமைப்பிலுள்ள 29-வது ஷரத்து இலங்கைப் பார்லிமெண்டுக்கு சுயநிர்ணயஉரிமையை மறுப்பதாகவும் பிரிவிகவுன்சில் ஒரு வழக்கில்அளித்த தீர்ப்பு இதற்கு சான்ருக இருக்கிறதென்றும் எனவே 29-வது ஷரத்தை அரசியல் அமைப்பிலிருந்து நீக்கவேண்டுமாதலால் புதிய அரசியல்அமைப்பே தேவையென்பது எதிர்க்கட்சியினரின் நிலை.

இப்போதைய அரசியல் அமைப்பு நமது நாட்டுக்குப் பொருத்தமற்ற தென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். இப்போதுள்ள அரசியல் அமைப்பில் திருத்தம் செய்ய வேண்டுமென்றும் இலங்கையை ஒரு குடியரசுநாடாகப் பிரகடனப் படுத்துவதற்கும் செனட் சபை, நியமன அங்கத்தவர்கள் பற்றித் தீர்மானிப்பதற்கும் பார்லிமெண்டின் இருசபைகளையும் கொண்ட தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டுமென்ற யோசனை காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகாவின் எம்.ஈ.பி. அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் முதலில் தெரிவிக்கப்பட்டது. இதன்படி 1957-ம் ஆண்டில் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது' அந்தக்குழுவின் முதல் இரண்டு கூட்டங்களில் கலந்து கொண்டபின் அதனுல்உரிய பயன் கிடைக்கப்போவதில்லையெனத் தெரிவித்து தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் குழுவிலிருந்து வெளியேறினர். இதன்பின்னர் அடிக்கடி தெரிவுக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டும், தெரிவு செய்யப்படவேண்டுமென்ற பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுமிருக்கின்றன. திருமதி சிறிமா பாண்டாரநாயகாவின் தலைமையிலான முன்னையஆட்சியின்போதும் தெரிவுக்குழு அமைக்கும் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. ஆயினும் பார்லிமெண்ட் கூட்டத் தொடர்கள் கலைக்கப்பட்டதாலும் ஆட்சி மாற்றங்களினுலும் தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்பட்டும் அவை தமது கடமையைச் செய்துமுடிக்க இயலாது போயிற்று. சிலசமயங்களில் தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படாமல் பிரேரணைகள் காலாவதியாகின.

இப்போதுள்ள அரசியல் அமைப்பு இந்நாட்டை ஆட்சிபுரிந்து வெளியேறிய பிரிட்டிஷாரினுல் உருவாக்கப்பட்டது.

நமதுநாடு இன்னும் பல பிரச்னைகளுக்குள்ளும் சிக்கித் தவித்துக்கொண்டுமுன்னேற முடியாமல் பின்தங்கிய நிலையிலிருப்பதற்கு இன்றைய அரசியல் அமைப்பே காரணம்.

நமது நாட்டுக்கு ஏற்ற, நமது சுதந்திரத்தையும் சுயநிர்ணய உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய அரசியல் அமைப்பு வேண்டும்.

நமக்கு ஏற்றவகையில்இப்போதுள்ள அரசியல் அமைப்பையே சீர்திருத்திஅமைத்துக்கொள்ளலாம். அல்லது புதிய அரசியல் அமைப்பையேஉருவாக்கிக்கொள்ளலாம்.

இன்றைய அரசியல்அமைப்பை பெரும்பான்மையினரும் விரும்பவில்லை; சிறுபான்மையினரும் விரும்பவில்லை.

ஆனல் இன்றைய அரசியல் அமைப்பிலுள்ள29-வது ஷரத்துத்தான் இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினத்தவருக்கு ஒரளவாவது பாதுகாப்பளிக்கிறது. இந்த ஷரத்து இருந்தும் கூட சிறுபான்மையினரின் உரிமைகள் அனைத்தும் பாதுகாக்கப்படவில்லை. உரிமைகள் பலவற்றை சிறுபான்மையினர் இழந்துள்ளனர்.

எதிர்க்கட்சியினர்கூறுவது போல் இந்த 29வது ஷரத்தும் அரசியல் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டால் இந்நாட்டில் சிறுபான்மை இனத்தவரின் எதிர்காலம் எப்படி இருக்கும்? சிறுபான்மையினர் சிந்திக்கவேண்டிய விஷயம்.

29-வது ஷரத்து நீக்கப்பட்டு அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் புதிய அரசியல் அமைக்கப்படவேண்டுமென எதிர்க்கட்சியினர் கூறலாம். ஆட்சி பீடப் போராட்ட... பெரும்பான்மைச் ... களைச் சேர்ந்த இரு... அரசியல் கட்சிகள் ... துக்குக்காலம் சிறுபா... யினர் விஷயத்தில் ... கொள்வதைப் பார்... அடிப்படை உரிமை... எத்தகையபாதுகாப்ப... கப்படுமென்பதிலும் ... டைய அடிப்படை ... களுக்குப் பாதுகாப்பு... கப்படும் என்பதிலும் ... எழுவதற்கு நியாயமு...

புதிய அரசியல்அமை... உருவாக்குவதற்கு அ... நிர்ணயசபையைக் ... வது நல்ல யோசனை ... ஆனல் இலங்கையில் ... போதுள்ள பெரும்பா... சிறுபான்மை உறவு நி... அரசியல் நிர்ணயசபை... படியான தீர்மான... மேற்கொள்ளும்: ... கைய அரசியல் அ... உருவாகும்; சிறுபா... யினரின் உரிமைகளுக்... வித பாதுகாப்புக் கி... கும் என்பதுபற்றி ... கத்தான்வேண்டும்.

இன்றையஅரசியல்அ... பில் திருத்தம் செய்வ... லும் எதிர்க் கட்சியி... ஒத்துழைப்பு வேவ... மூன்றில் இரண்டு ... பெரும்பான்மைப்பல... லாமல் இதைச் செய்... முடியாது. இந்த ... ழைப்பை எதிர்க்கட்சி... அளிக்கத் தயாராக இ...

## 'வவனிக்குள திட்டத்தில் தாய்க்குலத்தின் பணி'

### மன்னுர் அரசாங்க அதிபர் எடுத்துக் கூறுகிருர்

மல்லாவி, செவ்வாய்

''வளம்பெறு வன்னிநாட்டில் நெல்விளையும் சிறந்த பூமியும், புராதன இடமுமான மாந்தைப் பிரிவிலுள்ளவவனிக்குளத்திட்டத்தில் வாழ்பவர்கள் இந்நாட்டின் உணவுத் தேவைக்கேற்ப உணவுப் பொருளகளை உற்பத்திசெய்து நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் அதே நேரத்தில் இக்குடியேற்றப்பகுதியை நாடாக்க வந்த ஆடவர்களுடன் உறுதுணையாக நின்றுழைக்கும் தாய்க்குலம் நாட்டு மக்களுக்கு உடைகொடுக்கும் அரும்பணியை வெற்றியுடன் செய்யவேண்டும்''

இவ்வாறு மன்னுர் மாவட்டத்தின்கீழ் இயங்கும் வவனிக்குளத்திட்டத்தில் நிறுவப்பட்ட நெசவு நிலையத்தின் திறப்பு விழாவில் தலைமைதாங்கிய மன்னுர் அரசாங்க அதிபர் திரு. எம். நேசையா கூறினுர்.

நெசவு நிலையத்தின் புதிய கட்டடத்தை மன்னுர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் திறந்துவைத்தார்.

திரு. அழகக்கோன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது: இந்தப் பகுதியில்அதிக பெண்கள் வாழுகின்றுர்கள். இவர்களுக்கும் சிறுகுடிசைக் கைத்தொழில் வசதிஅளிக்க வேண்டும் எனக்கருதினேன் இதனுலேயே இந்நிலையத்தை இப்பகுதிக்கு ஒதுக்கித் தந்தோம். இதைத்திறம்பட நடத்தும் பொறுப்பு உங்களது. எனது பகுதியிலே திறக்கப்பட்ட பல நெசவு நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்நிலை ஏற்படாது பாதுகாப்பது உங்கள் கடமைகளில் ஒன்று.

திரு. வை. வேலுப்பிள்ளை, திரு. ...ரும். மாசிலாமணி, திரு. க. வேலுப்பிள்ளை உட்படபலர் உரைநிகழ்த்தினர்.

## இன்றைய பல...

8-11-67

புதன்கிழமை

ஐப்பசி...தம் 22-ந் ...

நட்சத்திரம்- உத்... டம் பி. ப. 1-20 ... திருவோணம்

திதி- ஸப்தமி பி.... 12-21 மேல் அட்ட...

சுபநேரம்- 4-35 ... 6-05

ராகுகாலம்- 12-0... 1-35.

மேஷம்- மனைவாழ்... மகிழ்ச்சி, அமை... உண்டு.
ரிஷபம்- புத்திரர் பு... புதுமையில் நாட்ட...
மிதுனம்- அன்னியவா... அகால போசனம்.
கடகம்- குடும்ப மகிழ்... படிப்பால் பயன்.
சிம்மம்- கடைபிரிக்... கவர்ச்சி, காத்திரு... அதிர்ச்சி.
கன்னி- புதுவழி நாட்... புண்ணிய விருப்பு.
துலாம்- செய்தொ... சிறப்பு செல்வ... உண்டு.
விருச்சிகம்- எண்ண... கிடைக்கும் இர... சிந்தை.
தனுசு- அலைச்சல் ... அற்பலாபம்.
மகரம்- பின்னணி... பிளவு, முன்னண... நிற்காதே.
கும்பம்- கற்றதால்ப... காரியம் கைகூடும்.
மீனம்- வழக்குவிவக... வரவும் தடைப்படு...

—சோதிடக் கலாநி...

திருமலை வேலுப்பிள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ல் அமைப்பு புதியதா?

...பீடப் போராட்டத்தில் ...பெரும்பான்மைச் சமூகங் ...களைச் சேர்ந்த இருபெரும் அரசியல் கட்சிகள் காலத் ...துக்குக்காலம் சிறுபான்மை ...யினர் விஷயத்தில் நடந்து ...கொள்வதைப் பார்த்தால் அடிப்படை உரிமைகளுக்கு எத்தகையபாதுகாப்பு அளிக் ...கப்படுமென்பதிலும் யாரு ...டைய அடிப்படை உரிமை ...களுக்குப் பாதுகாப்பு அளிக் ...கப்படும் என்பதிலும் ஐயம் எழுவதற்கு நியாயமுண்டு.

புதிய அரசியல்அமைப்பை ...உருவாக்குவதற்கு அரசியல் ...நிர்ணயசபையைக் கூட்டு ...வது நல்ல யோசனைதான். ...ஆனால் இலங்கையில் இப் ...போதுள்ள பெரும்பான்மை ...சிறுபான்மை உறவு நிலையில் ...அரசியல் நிர்ணயசபை எப் ...படியா... தீர்மானத்தை ...மேற்கொள்ளும்: எத்த ...கைய அரசியல் அமைப்பு ...உருவாகும்; சிறுபான்மை ...யினரின் உரிமைகளுக்கு எவ் ...வித பாதுகாப்புக் கிடைக் ...கும் என்பதுபற்றி யோசிக் ...கத்தான்வேண்டும்.

இன்றையஅரசியல்அமைப் ...பில் திருத்தம் செய்வதானு ...லும் எதிர்க் கட்சியினரின் ...ஒத்துழைப்பு வேண்டும். ...மூன்றில் இரண்டு பங்கு ...பெரும்பான்மைப்பலம் இல் ...லாமல் இதைச் செய்துவிட ...முடியாது. இந்த ஒத்து ...ழைப்பை எதிர்க்கட்சியினர் ...அளிக்கத் தயாராக இல்லை.

புதிய அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கை நிறைவேறுவதானாலும் ஆளும்கட்சியினரின் ஆதரவும் ஒத்துழைப்பும் வேண்டும்.

இருதரப்பினரும் ஒத்துழைக்கத் தயாராயில்லை. எனவே இன்றைய அரசியல் அமைப்பே இன்னும் சில காலத்துக்கு நீடித்திருக்குமென்று நம்பலாம்.

## இன்றைய பலன்

8-11-67

புதன்கிழமை

ஐப்பசி...தம் 22-ந் திகதி

நட்சத்திரம்- உத்தரா...ம் பி. ப. 1-20 மேல் திருவோணம்

திதி- ஸப்தமி பி.இரவு 12-21 மேல் அட்டமி

சுபநேரம்- 4-35 — ...-05

ராகுகாலம்- 12-05— ...-35.

மேஷம்- மனை வாழ்வில் மகிழ்ச்சி, அமைதியும் உண்டு.

...ஷபம்- புத்திரர் புகழ், புதுமையில் நாட்டம்.

...துனம்- அன்னியவாசம், அகால போசனம்.

...டகம்- குடும்ப மகிழ்ச்சி, படிப்பால் பயன்.

...ம்மம்- கடைபிரிக்கும் கவர்ச்சி, காத்திருக்கும் அதிர்ச்சி.

...ன்னி- புதுவழி நாட்டம் புண்ணிய விருப்பு.

...லாம்- செய்தொழில் சிறப்பு செல்வமும் உண்டு.

...ருச்சிகம்- எண்ணியது கிடைக்கும் இரக்க சிந்தை.

...னுசு- அலைச்சல் மிகுதி அற்பலாபம்.

...கரம்- பின்னணியில் பிளவு, முன்னணியில் நிற்காதே.

...ம்பம்- கற்றதால்பயன், காரியம் கைகூடும்.

...னம்- வழக்குவிவகாரம் ...வரவும் தடைப்படும்.

—சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## இளைஞரை காணவில்லை

ஊர்காவற்றுறை, செவ்.

கொழும்பிலுள்ள அரசாங்கஅச்சகத்தில் வேலைபுரிந்த சரவணைகிழக்கு வாசியான பாலசுப்பிரமணியம் என்ற வாலிபரை [வயது25] சென்ற ஆகஸ்ட் மாதம் பிற்பகுதியிலிருந்து காணவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற ஆகஸ்ட் பிற்பகுதியில்இருந்து இவர் கந்தோருககுச் செல்லாமல்இருந்து வருகிறாரெனவும் இவரது தந்தையும் தாயும் சுற்றத்தவரும் இவரை இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று தேடினர் எனவும் தெரிகிறது. இதுவரை இவரை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இவரது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ எனவும் சந்தேகிக்கப்படுகிறது. மனக்கவலை காரணமாக உத்தியோகத்தை வெறுத்து இவர் அலைந்துதிரியக்கூடும் என்ற காரணத்தைக்கொண்டுதான் இதுவரை தேடிப்பார்த்ததாகவும், தங்களால் இவரைக் கண்டுகொள்ள முடியவில்லை என்றும், பத்திரிகைகளின் உதவியை பின் நாடியதாகவும் தந்தை வேலாயுதம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 8-11-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, பொன். தெய்வேந்திரன், 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் மன்றம்.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-20 பேச்சு, 10-15 தேர்ந்த இசை.

## நெசவுசாலை திறப்புவிழா

வாகரை, செவ்வாய்

வாகரையில் நிறுவப்பட்டுள்ள நெசவுசாலையைக் கற்குடா எம். பி. திரு. கே. டபிள்யு. தேவநாயகம் திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் பேசிய கிராமசபை அங்கத்தவர் திரு. எஸ். எஸ். சேனாதிராசா வாகரை மாதர் முன்னேற்றச்சங்கமும், காரியாதிகாரி திரு.முருகவேளும் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாகவே நெசவுசாலை உருவாக முடிந்தது என்று குறிப்பிட்டார். திரு. எல். கபீரியல் உட்பட வேறு பலரும் பேசினர்.

## மண்டைதீவுக்கு தனிக் கிராமசபை

ஊர்காவற்றுறை, செவ்.

இதுவரைகாலமும் அல்லைப்பிட்டிகிராமசபையினுள் இருந்த மண்டைதீவுக்கு புதியதொரு தனிக்கிராமசபை உதயமாகப்போகின்றது. இதற்கான அறிவித்தல் சம்பந்தப்பட்ட அதிகாரியினால் வெளியிடப்பட்டுள்ளதாகஅறியப்படுகிறது.

## பாடசாலை கட்டுவதற்குக்காணி

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை—சின்னமடுக் கத்தோலிக்க பாடசாலை கட்டுவதற்கு ஒருஏக்கர் காணியை யாழ்ப்பாணம் மேற்றிராணியார் கொடுக்க முன்வந்துள்ளார். சின்னமடு மாதா ஆலயத்திற்கு அருகாமையில் இக்காணி உள்ளது.

1964-ம் ஆண்டில்நிகழ்ந்த சூறுவளிக்காற்றினால் சரவணை சின்னமடு பாடசாலை தரைமட்டமானது. இன்றுவரை இப்பாடசாலை ஆலய மண்டபத்தினுள் நடைபெற்று வருகிறது.

## அல்லைப்பிட்டி கிராமசபை

ஊர்காவற்றுறை செவ்.

இதுவரை காலமும் அல்லைப்பிட்டி கிராமசபையினுள் இருந்துவந்த மண்டைதீவுக்குப் புதிய கிராமசபை அமைக்கப்பட இருப்பதால் அல்லைப்பிட்டி மண்கும்பான் மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அல்லைப்பிட்டி மண்கும்பான் கிராமங்களை உள்ளடக்கித் தனி கிராமசபை அமைக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். தீவுப்பகுதி எம். பி. யின் பெருமுயற்சியால் தனிக் கிராமசபை தோற்றுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## சந்நிதி 'அப்பீல்' ஒத்திவைப்பு

கொழும்பு. வெள்ளி

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயப்பிரவேச வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

செல்வச்சந்நிதி ஆலயத்திற்குள் சென்று வழிபடவிடாது தடுத்ததாக தொண்டமனாற்றைச் சேர்ந்த லக்குணம் என்பவர் தொடர்ந்த வழக்கில் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு தண்டனை விதித்தார். எதிரிகள் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்திருந்தனர்.

## பென்சன் கிடைக்கும்

யாழ்ப்பாணம். புதன்

1960-ம் வருடம் ஓய்வுபெற்ற யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர் சிலருக்கு இதுவரை வழ்க்கப்படாதிருந்த பென்சன் விரைவில் வழங்கப்ப... இதனால் 35 ... ஊழியர்கள் ... களெனத் தெரிய வருகிறது.

# வருணன் சொரிந்தான்; வரப்பு நீர் உயர்ந்தது

முக்கியமாக வடபகுதியிலும், பொதுவாக வன்னி, கிழ்மாகாணப் பகுதிகளிலும் நெல் செய்யும் கமக்காரர் விரும்பியவண்ணம் வருண பகவான் வானமாமழையை ஒழுங்காக, செழிப்பாகத் தந்துதவியிருக்கிறார். எவருமே கவலைப்படாத அளவுக்கு செப்பமான முறையில் நெல்வயல்களில் வெள்ளம் நிற்கிறது. இப்படியே தவறாது மழைபெய்து கொடுத்துக் கொண்டிருந்தால் இவ்வருட பெரும்போக வேளாண்மை வெகு பிரமாதமாயிருக்கும்.

நெல் வயல்களில் களை பிடுங்கும் வேலையும், பற்றுக்குறையான இடங்களில் நாற்று நடும் வேலையும் இப்பொழுது மும்முரமாக நடந்துவருகின்றன. இன்னும் சில தினங்களில் பயிர்கள் மட்டம் வெடித்து கதிர்க்குலை போட ஆரம்பிக்கும்.

இதுதான் மிகவும் முக்கியமான கட்டம். இந்த சமயத்தில் வயல்களில் நிறையவெள்ளம் நிற்க வேண்டும். இன்றுவரை பெய்த மழை இதற்கு போதுமானதே, ஆயினும் இதுமட்டும் போதாது. கதிர் பால்வரும் முடிந்து மணி கட்டும் பருவத்திலும் நல்ல மழை பெய்யவேண்டும். இல்லாவிட்டால் விளைந்த நெல்மணிகள் சப்பியாக போய்விடக்கூடும்.

வருணன் கடைசிநேரத்தில் கைவிட்டுவிடமாட்டாரென்றே கமக்காரர் நேர்த்திக்கடன் செய்கிறார்கள்.

மழை ஒழுங்காக பெய்து கொடுத்தமையால் பயிருடன் கூட புல்பூண்டுகளும் ஒருங்கே வளர்ந்திருக்கின்றன. வழக்கம்போல இவற்றை களைந்து பிடுங்குவதையே நமது கமக்காரர் நம்பியிருக்கிறார்கள். இந்தப் புல்பூண்டு முதலிய களைகளில் ஒன்றிரண்டாவது முற்றிப் பருத்து பூத்து அதிலிருந்து விதைகள் உண்டாகுமானால் அது ஒன்றே போதும் அடுத்தவருடம் வயல் முழுவதும் களை உண்டாவதற்கு. ஆகையால் புல் பூண்டுகள் பூக்கும் பருவத்துக்கு முன்னரேயே அவற்றை அளித்துவிடும் மார்க்கத்தை கையாள வேண்டும்.

இப்பொழுதெல்லாம் களைகொல்லி மருந்துகள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றை உபயோகித்தால் இரண்டு மூன்று வருடங்களில் களைகளை துப்புரவாக அழித்துவிடலாம். வருடாவருடம் களைபிடுங்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

இதில் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. ஒருவர் மட்டும் களைகொல்லியை உபயோகிப்பதால் பிரயோசனமில்லை. மற்றவரின் வயலிலிருந்து களை விதைகள் காற்றோடும் வெள்ளத்தோடும் வந்து சேர்ந்துவிடும். ஆகையினால் கமக்காரர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து களைகொல்லி மருந்தை உபயோகித்தால் தான் நல்ல பலன் கிடைக்கும்.

செயற்கை பசளைகளையும் மருந்துகளையும் வயல்களில் போடுவதால் பயிருக்கு நஷ்டமுண்டாகும், நிலம் கெட்டுப்போகும் என்று சில வருடங்களுக்குமுன் பல தவறான அபிப்பிராயங்கள் நிலவிவந்தன. இப்பொழுது அவை எல்லாம் மறைந்துவிட்டன. ஒரு கமக்காரரின் முன்மாதிரியைக்கண்டு பலரும் செயற்கை உரங்களை உபயோகிக்கின்றனர்.

நெற்பயிர் வளரும் ஒவ்வொரு போகத்திலும் ஒவ்வொரு வெவ்வேறு தினுசான உரங்களை இடவேண்டும். அப்பொழுதுதான் பூரணமாக பலன் கிடைக்கும். கமப்பகுதி போதனாசிரியரின் ஆலோசனையுடன் செயற்கை உரத்தை பாவித்து வந்தால் விளைச்சல் அமோகமாக அதிகரிக்குமென்பது நிச்சயம்.

## களத்து மேடு

— 'கலப்பை' —

## 7 வருட கடூழியம்

காலி, செவ்வாய்

ஹிக்கடுவா பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பெறதுடுவா என்னுமிடத்தைச் சேர்ந்த கே. ஜி. தனபாலா என்பவர் அதே ஊரைச் சேர்ந்த ஏ. ஆர். ரணசேனா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்யமுயன்ற குற்றத்துக்காக அவருக்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கில் இரண்டாவது எதிரியான கே. ஏ. அமரதாசா என்பவருக்கு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ரணசேனாவின் தாயாரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியகுற்றத்துக்காகவே இவருக்கு இத் தண்டனை வழங்கப்பட்டது.

காலி அசைஸ் நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது விசாரணை நடத்திய நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்.

## கி.அ அதிகாரி இங்கு இல்லை

நெடுந்தீவில் பலவருடங்களாக இருந்து வந்த கிராம அபிவிருத்தி அதிகாரி உத்தியோகத்தர் பதவி கடந்த எட்டுமாதங்களாக நிரப்பப்படாமல் இருப்பதாகவும், யாழ்ப்பாணத்துக்கு நியமிக்கப்பட்ட அதிகாரியே தற்பொழுது கவனித்து வருவதாகவும் அவரும் ஒரு மாதத்தில் ஒரு தடவை மட்டும்தான் இங்கு விஜயம் செய்வதாகவும் தெரிய வருகிறது.

நெடுந்தீவு கிழக்குகிராம முன்னேற்றச் சங்கம் ஒரு நிரந்தரமான கிராம அதிகாரியை கூடிய விரைவில் இங்கு நியமிக்குமாறு கலா... ...மற்றும் ... அதிகாரிகளுக்கும் ஒரு மகஜர் அனுப்பியுள்ளது

## நிபுணர்கள் ஆலோசனை

கொழும்பு. செவ்

புகையிரதப் பகுதியின் சேவை மக்களுக்கு இன்னும் சிறப்பாகக் கிடைக்க புகையிரதப்பகுதி பிரிட்டிஸ் நிபுணர் ஒருவரின் ஆலோசனையையும் பெறவிருக்கிறது.

இங்கு இதற்கென வந்துள்ள பிரிட்டிஷ் புகையிரதப் பகுதியைச் சேர்ந்த திரு. றெஜினல்ட்ஸ் கிரகரி இங்கு ரயில் வண்டிகள் முழுவதும் டீசல் எண்ணெயில் இயங்குவதற்கான ஆலோசனையையும் தெரிவிப்பார், ரயில்வீதி போக்குவரத்து இணைப்புச் சேவை பற்றியும் இவரது ஆலோசனைகள் பெறப்படவிருக்கிறது.

## சமபல கோஷ்டிகள் இன்றுமோதும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் தோல்வியே காணாத தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியும் கொக்குவில் இந்துக்கல்லூரியும் இன்றுமாலைபெரும் மோதலில் ஈடுபடும்.

இதுவரை நடைபெற்று முடிந்தபோட்டிகளில் கொக்குவில் இந்துக்கல்லூரி 7 புள்ளிகளும் மகாஜனக் கல்லூரி 9 புள்ளிகளும் பெற்றுள்ளன. எனினும் இம்மோதலில் வெற்றியீட்டும் கோஷ்டியே 'ஏ' டிவிஷனில் முதன்மை பெற்ற கோஷ்டியாகக் கருதப்படும்.

இப்போட்டியை அடுத்து இதுவரை நடைபெற்ற போட்டிகளின்படி 7-7 சமபுள்ளிகளைப் பெற்றிருக்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் ஒரு உக்கிரமான மோதலில் ஈடுபடும். இப்போட்டியில்வெற்றியீட்டும் கோஷ்டியே 'பி' டிவிஷன் ஒன்றில் முதன்மை பெற்ற கோஷ்டியாகக் கருதப்படும்.

## 'நீர் அதிர்ஷ்டசாலி'

காலி, செவ்வாய்

'நீர் அதிர்ஷ்டமான ஒரு மனிதர் என்றே கூறவேண்டியிருக்கிறது. ஜூரிகள் எந்தக் காரணத்தைக்கொண்டு நீர் குற்றவாளியல்ல என்ற முடிவுக்கு வந்தார்கள் என்று எனக்குத்தெரியவில்லை? என நீதியரசர் திரு, வி. மாணிக்கவாசகர் கொலை முயற்சி வழக்கொன்றில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

பத்தேமவைச் சேர்ந்த கினிமெலகஹா என்னுமிடத்திலுள்ள தேவா ஆரியசேனா என்பவர் அதேகிராமத்தைச்சேர்ந்த வி. எஸ். தர்மசிறீ வைத்யசேகரா வீரசிங்கா என்பவரைக் கத்தியால் குத்திக்கொலை செய்ய முயன்றதாக தொடரப்பட்டிருந்தது.

[வி நி]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்தித் திரட்டு

## அப்பீல் அனுமதி

கோடீஸ்வரன் மொழி வழக்கில் இலங்கை சுப்ரீம் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து லண்டன் பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்ய திரு. செ. கோடீஸ்வரனுக்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

திரு. கோடீஸ்வரன் அனுமதி கோரி தாக்சல் செய்த விண்ணப்பத்தை கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர்கள். திருவாளர்கள் எ டபிள்யு. எச். அபேசுந்தரா, ஜி.டி. சமரவிக்கிரமா ஆகியோர் பரிசிலனை செய்த பின்னர் இத்தீர்ப்பை வழங்கினர். உத்தியோக மொழியில் தேர்ச்சியடையாதது குறித்து திரு. கோடீஸ்வரனுக்கு கொடுக்கப்பட்டிருந்த சம்பள உயர்வையும் அதற்கான அலவன்ஸ்களையும் திரும்பவும் பெற்றுத்தருமாறு திரு. கோடீஸ்வரன் தாகைல் செய்த வழக்கில் முன்னர் கொழும்புமாவட்ட நீதிமன்றம் கோடீஸ்வரனுக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கியதும் சுப்ரீம்கோர்ட் அத் தீர்ப்பை அப்பீலில் நிராகரித்ததும் தெரிந்ததே. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய இப்போது அனுமதி கிடைத்திருக்கிறது.

ஃ ஃ ஃ

## 50பேர் சித்தி

1966-ம் ஆண்டு டிசம்பரில் நடந்த ஜி.ஸி. ஈ. உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெறாத 50 மாணவர்கள் மீண்டும் விடைத்தாள்களை நுணுகி ஆராய்ந்ததன் பயனாக சித்தி பெற்றனர்.

ஃ ஃ ஃ

## நாவலர்சொத்து

ஆறுமுகநாவலரின் தருமசாதன சொத்துக்களுக்குத் தென்னிந்தியாவில் ஏற்பட்டிருக்கும் ஆபத்துக் குறித்து தீவிர தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் சைவப் பெரியார்கள் அடங்கியசபையொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இச்சபையைச் சேர்ந்தவர்கள் விரைவில் சென்னைக்குச் சென்று சட்டரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடுமென தெரியவருகிறது.

ஃ ஃ ஃ

## காணிக் கச்சேரி

கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த வட்டக்கச்சி, முரசுமோட்டை ஆகிய இடங்களிலுள்ள குடியேற்றத்திட்ட வாசிகளுக்கு அறுநூறு எக்கர் காட்டு நிலம் வழங்கப்படவிருக்கிறது

ஃ ஃ ஃ

## கப்பல் சேவை

ராமேஸ்வரம்-தலைமன்னார் கப்பல்சேவை கடந்தவெள்ளிக்கிழமையுடன் நிறுத்தப்பட்டது. வியாழனிரவு தலைமன்னார் துறைமுகம் வந்து சேர்ந்த கப்பலில் 300க்கு மதிகமான பிரயாணிகள் இலங்கை வந்தனர். நவம்பர், டிசம்பர் ஆகிய இரு மாதங்களிலும் கப்பல் சேவை நிறுத்தப்பட்ட பின்னர் மீண்டும் இக் கப்பல் சேவை ஜனவரி முதல் திகதி ஆரம்பமாகும்.

ஃ ஃ ஃ

## தொடர்ந்து மழை

கடந்த மூன்று தினங்களாக கொடிகாமம்பகுதியில் பெய்த மழையினால் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வாய்க்கால்கள், ஒழுங்கைகள் வெள்ளத்தால் நிரம்பியுள்ளதால் பாதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாமல் கஷ்டமடைந்துள்ளனர். சில கிணறுகளும், குளங்களும் நிரம்பியுள்ளன.

ஃ ஃ ஃ

## தொலைபேசி தொடர்புகள்

தகவல் தொடர்பு இலாகாவினர் தொலைபேசித் தொடர்புகள் சேவையை சீராக நடத்த முடியாதநிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றரை தொன் செம்புவயர் இத்தொடர்புகள் சீராகஇயங்குவதற்கு உடன் தேவைப்படுவதாகவும் ஜூலை மாதத்தில் இந்திய கம்பெனியொன்றுடன் செய்து கொள்ளப்பட்ட ஆர்டர் பொருள்கள் இன்னமும் வந்துசேரவில்லையெனவும் மேற்படி இலாகாவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார். மழைகாரணமாக நிலைமை மேலும்மோசமாக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் மூன்று மாதங்களுக்கு இந்நிலையைத் திருத்த ஒன்றும்செய்யமுடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

## மலேரியா

இந்த வருடத்தில் 1682 பேருக்குமலேரியா தொற்றியிருந்ததாகக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சென்றஇருதினங்களில் 17பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

## அரசாங்கசேவை

1966-67-ம் வருடத்தில் அரசாங்கம் கோவில் திருவிழாக்களுக்குவரும் யாத்திரீகர்களின் வசதிக்காகவும் இவர்களின் போக்குவரத்துக்காகவும் அனுதரவாளர்களுக்காகவும் உரிமை கோரப்படாத சடலங்களை சவ அடக்கம் செய்வதற்காகவும் இரண்டுலட்சத்துஐயாயிரம் ரூபாவரை செலவிட்டது.

## ரூ. 1 லட்சம் விற்பனை

யாழ்ப்பாணம். புதன் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள 'லக்சல' வில் முதல் 5 தினங்களுக்கும் 1 லட்சத்து நாலாயிரம் ரூபா விற்கு விற்பனை நடைபெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

## ஆசிரியர் மீது குற்றச்சாட்டு

கண்டி, செவ்வாய் மாணவனை குத்தி கொலை செய்ய முயற்சித்ததாக கண்டியிலுள்ள நடனஆசிரியர்மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு கண்டி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. ரி.எஸ்.பெர்னாண்டோ முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கண்டியிலுள்ள கோயில் ஒன்றில் நடனமாடிக்கொண்டிருந்தபோது எதிரிகுத்தியதாக மாணவன் தெரிவித்தான் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## நவாலி வென்றது

காரைநகர் செவ் நவாலி செண் பீற்றர்ஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் காரைநகர்கடற்படை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகித பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நவாலி சென்பீற்றர்ஸ் 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு மத்தியஸ்தராக குணபாலா மத்தியஸ்தம் வகித்தார்.

பீடைகள், களைகளிடமிருந்து உங்கள் நெற்பயிரைக் காப்பாற்றுங்கள்.




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

றோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைப்பந்தாட்டம்

# உடுவில், வேம்படி கோஷ்டிகள் சாம்பியன்களாயின

## விறுவிறுப்பான விளையாட்டை மழை கெடுத்தது

யாழ்ப்பாணம், புதன்

யாழ் மாவட்ட மகளிர் கல்லூரி விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மகளிர் கல்லூரிகளுக்கிடையேயான வலைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதிச்சாம்பியன் போட்டிகள் நேற்று முன் தினம் மாலையாழ்.விளையாட்டரங்கில் விறு விறுப்பாகவும் பரபரப்பாகவும் நடந்து கொண்டிருந்த சமயம் மழை வந்ததால் விளையாட்டை பாதியில் நிறுத்த வேண்டியநிலை ஏற்பட்டது.

எனினும் இரு சாம்பியன் போட்டிகள் நடைபெற்று முடிந்தன, முதலில் நடைபெற்ற 14 வயதுக்குக்கீழ்ப் பட்டோர் போட்டியில் வேம்படி வீராங்கனைகள் 6-4 புள்ளிகளால் உடுவில் வீராங்கனைகளைத் தோற்கடித்தனர். இவ்விரு கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற மோதல் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும்அருமையானதாகவிருந்தது. வேம்படி முன்னணி வீராங்கனைகள் துள்ளிப்பாய்ந்து சுறு சுறுப்பாக ஆடினர். இடைவேளைக்கு முன் எதிர்க் கோஷ்டி இரு புள்ளிகள் பெற்றிருந்தபோது இவர்கள் 3 புள்ளிகளைப் பெற்றனர்.

இடைவேளைக்குப்பின்னர் மோதல் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. இச்சந்தர்ப்பங்களில் உடுவில் கோஷ்டியைச் சேர்ந்த மாலதி சந்திரா அருணசலம் ஆகியோரின் விளையாட்டு பாராட்டும்படியாக இருந்தது சுறு சுறுப்பாக ஆட்டத்தில் ஈடுபட்டிருந்தபோதும் வலைக்குள் பந்தைப்போடும் கட்டங்களில் வேம்படி முன்னணி வீராங்கனைகள் நிதானத்துடன் பந்து போட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

### கொன்வென்ற் உடுவில்மோதல்

இப்போட்டியை அடுத்து யாழ்ப்பாணம் கொன்வென்ற் வீராங்கனைகளுக்கும் உடுவில் வீராங்கனைகளுக்குமிடையே நடைபெற்ற பெரும் மோதல் ரசிகர்களைப் பரபரப்பில் ஆழ்த்தியது. இடைவேளைக்கு முன்னர் உடுவில் வீராங்கனைகள் தமது நிதானமான 'பாசிங்' ஆட்டத்தின் மூலம் கொன்வென்ற் கோஷ்டியைத் திணறித்துக் கொண்டிருந்தனர். அடுக்கடுக்காக வலையில் பந்தைப் போட்டு எதிர் கோஷ்டி ஒரு புள்ளி பெற்றிருக்கத்தக்கதாக 8 புள்ளிகளைப்பெற்றனர். அந்தரத்தில் வந்த பந்தை அபாரமாகப்பாய்ந்து பிடிப்பதில் உடுவில் கோஷ்டியைச்சேர்ந்த செல்வி. எஸ். சோதிமணி வீரமணியாகவே இருந்தார். கட்டத்துக்குக்கூட்டம ரசிகர்களின் பலத்த 'அப்பிளாஸ்' அவருக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது

இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற ஆட்டத்தில் கொன்வென்ற் வீராங்கனைகள் எதிர்க்கோஷ்டியைஒரு புதுஉற்சாகத்துடன் எதிர்த்தனர். செல்விகள் ஜெசிந்தா கிறே சிங்கராயர் ஆகிய வீராங்கனைகள் மின்னல் வேகத்தில் பந்தைக் கைமாறிக்கொண்டிருந்தனர். மளமள வென்று இருசராரும் வலையில் பந்தைப் போடத்தொடங்கினர். எனினும் உடுவில் வீராங்கனைகள்விட்டுக்கொடுக்க வில்லை. செல்விகள்ஜே. முத்தையா, ஸ்ரீவசந்தா ஆகிய வீராங்கனைகள் பம்பரவேகத்தில் பந்தை வலைக்குள் வீழ்த்தினர் அவர்களின் வலைக்குள் வீழ்த்தும் கட்டங்கள் அருமையாகஇருந்தன. இதன்பலனுக உடுவில்கோஷ்டி 7 புள்ளிகளையும் கொன்வென்ற் கோஷ்டி 4புள்ளிகளையும் மேலதிகமாகப் பெற்றன. இப்போட்டி முடிவில் உடுவில் மகளிர்கோஷ்டி யாழ்ப்பாணம் கொன்வென்ற் மகளிர்கோஷ்டியை 15—5 புள்ளிகளால் வென்று கீழ்ப் பிரிவு சாம்பியனுகியது.

இப்போட்டிகளை அடுத்து யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்த மேற்பிரிவுமோதலை மழை கெடுத்துவிட்டது. இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு கொன்வென்ற் வீராங்கனைகளும் யாழ்ப்பாணம் ஸ்ரார்கிளப் வீராங்கனைகளும் மைதானத்தில் இறங்கித்தம்மைத் தயார் படுத்தும் தறுவாயில் மழை காரணத்தால் ஆட்டம் கைவிடப்பட்டது.

]வி. நி]

வினையாட்டுக் கழக

## சம்மேளனம்

உடுப்பிட்டி, செவ்.

வடமராட்சி விளையாட்டுக் கழகங்கள் சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டம் வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

போஷகர்: வடமராட்சி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன், உபபோஷகர்கள்: உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், தலைவர்: வல்வெட்டித்துறை பட்டின சபைத் தலைவர் திரு. எம். வி. இரத்தினவடிவேலு, உபதலைவர்கள்; திருவாளர்கள் வி. தங்கராசா, எஸ், இரத்தினவேல், வ. சண்முகராசா, எம். எல். முருகப்பா, எஸ். பஞ்சலிங்கம், வே. நாகநாதன், பொதுச்செயலாளர்: புவியியல் விரிவுரையாளர் திரு. டபிள்யு. ஆர். அருளையா, உபசெயலாளர்கள்: திருவாளர்கள் கே. கார்த்திகேசு, கே. அப்பாத்துரை, எஸ். தாமோதரம்பிள்ளை, பொருளாளர்: திரு. சி. ஜோதிரவி.

ஒவ்வொரு விளையாட்டிற்கும் ஒவ்வொரு செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகள் உடற்பயிற்சிப்போதனசிரியர் திரு. கே. கார்த்திகேசுநன் றிகூறினர்.

50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி வருகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்

உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில்

முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 167. தேதி 10-11-67 புத்தம் புதிய மொரிஸ் மினிமொக் ரூ. 9,100/-*



சீட்டிழுப்பு இல. 167

சீட்டிழுப்பு இல. 168 தேதி 17-11-67—புத்தம் புதிய டற்சன் புளூபேர்ட் ரூ. 10,755/61-*



* இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனிப்பட்டியல் விலைகளாகும்.

சீட்டிழுப்பு இல. 168

இந்த கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்பின் 14நாள்களுக்குமட்டும் வழங்கப்படும்

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலிடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மகாஜனு - மானி. இந்து உதைபந்தாட்டம்:**

# மைதானத்துக்குள் ரசிகர்கள் படையெடுப்பு

## விறுவிறுப்பான மோதல் இடையில் முடிந்தது

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நேற்று மாலை யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சமபல உதைபந்தாட்ட மோதல் முடிவடையும் கட்டத்தில் ரசிகர்கள் மைதானத்துக்குள் படை எடுத்த காரணத்தினால் ஆட்டம் கைவிடப்பட்டது.

ஆரம்பத்திலிருந்து விறுவிறுப்பாக இருந்த ஆட்டம் நிறுத்தப்படும்போது இரு கோஷ்டியினரும் 2-2 கோல்கள் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப் பின்னர் மகாஜனக்கோஷ்டியில் இருந்து முதலில் ஒரு வீரர் முறையாக ஆடாத காரணத்தினால் வெளியேற்றப்பட்டார். இதையடுத்து ஆட்டத்தின்போது, ஒரு கட்டத்தில் மகாஜனக் கோல் காப்பு வீரர் பலமாகத் தாக்கப்பட்டார். இதனால் மயக்கமடைந்த கோல்காப்பு வீரர் மைதனத்துக்கு வெளியே தூக்கிச் செல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து ரசிகர்கள் கூட்டத்திலிருந்து ஒரு பகுதி மைதானத்துக்குள் பிரவேசித்தது. இதனால் ஆட்டம் கைவிடப்பட்டது. [வி. நி.]

# 'சம்பவதினம் 5-ம் எதிரி எனது காரை செலுத்தினர்'

## கிளிநொச்சி வர்த்தகர் கடத்தல் வழககில் சாட்சியம்

சாவகச்சேரி. செவ். ''சம்பவதினத்தில் 5-ம் எதிரி எனது காரை ஓட்டிச் சென்றூர். இவ்வருடம் ஜூலை 23-ம் திகதி எங்கள் வீட்டில் காரைக் கண்டேன். ஸ்ரீ. என். 1333 நம்பருள்ள இக்காரில் பழுது ஏற்பட்டிருந்ததால் சிவசம்பு கராச்சில் அன்று மாலை திருத்துவதற்காகவிடப்பட்டது.

கிளிநொச்சி கார்வாலியோ கடத்தல் வழக்கு மீண்டும் சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்தவரான சம்பவத்தின்போது உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் காரின் உரிமையாளர் செ. ஆறுமுகம் [30 வயது] மேற்கண்டவாறு கூறினுர்.

மூல் வியாபாரியான எம். கார்வாலியோவைக் கடத்தி மூன்று தினங்கள் தர்மபுரம் காட்டில் வைத்துத்தாக்கியதாகப் பத்துக்குற்றச்சாட்டுகளின் பேரில் சதாசிவம் ரத்தினம், பிலிப் ராசதுரை, கதிரவேலு காளிமுத்து, பி. தம்பிராசா அல்லது நமசிவாயம், கே. தம்பிராசா அல்லது சின்னத்துரை [5-ம் எதிரி] பொன்னையா தனபாலசிங்கம் ஆகிய ஆறு பேர் மீதும் கிளிநொச்சிப் பொலிஸாரால் குற்றம் சாட்டி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

செ. சுப்பிரமணியம், க. சிவசம்பு ஆகியோரும் சாட்சியமளித்தபின் மேல்விசாரணை இம்மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பிணையில் செல்ல அனுமதி

## கூழ்முட்டை வீச்சு சம்பவ எதிரொலி

யாழ்ப்பாணம். புதன் அமெரிக்க ஸ்தானிகரின் காருக்கு கூழ்முட்டை வீசிய சம்பவத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட கந்தசாமி என்ற வாலிபர் 500 ரூபா சரீரப் பிணையில் சென்றூர்.

றிமாண்றல் வைக்கப்பட்டிருந்த இவ் வாலிபர் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜாமில் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேக நபரான இவ் வாலிபர் சார்பில் புரக்டர் ஏ. அன்ரன் ஆஜரானுர். மாஜிஸ் திரேட் 500 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து விசாரணையை இம்மாதம் 29-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணம் பொதுஜன கலக சிறுவர் பகுதி திறப்பு விழாவின் போது நடந்த கூழ்முட்டை வீச்சு சம்பவத்தில் இவ்வாலிபர் பொலிசாரால் கைது செய்யப் பட்டார்.

# மூவர் கைது

## சிறகு வலைத் திருட்டு காரணம்

யாழ்ப்பாணம், புதன் சிறகுவலைத் திருட்டு ஒன்று சம்பந்தமாக பாஷையூர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மூவரை கரையூர் பொலிசார் நேற்றும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அமிர்தசிங்கம், கிறிஸ்ரியன், பாலன் ஆகிய மூவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 10 மஞ்பள் நிறமுள்ள சிறகுவலைகளை கரையூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. சூசைப்பிள்ளை கைப்பற்றினர்.

நேற்று முன் தினமும் சிறகுவலைக் களவு சம்பந்தமாக கரையூர் பொலிசாரால் இருவர் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ந. நி.)

# மாணவர் மத்தியில் குழப்பம்

கொழும்பு, செவ்வாய் இன்று கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையில் கல்வீச்சும் இடம்பெற்றது. இதில் ஒரு விரிவுரையாளரும் சில மாணவர்களும் காயமடைந்தனர். அமைதியை நிலைநாட்ட பொலிசார் அழைக்கப்பட்டனர்.

இதற்கிடையில் வகுப்புகளை பகிஷ்கரிப்பு செய்து வரும் மாணவர்களில் விஞ்ஞான மாணவர்கள் 10-ந் திகதி வகுப்புகளுக்குத் திரும்புவதாக அறிவித்துள்ளனர்.

# இன்றைய போட்டி

குரும்பசிட்டி, செவ். சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை மாலை 3-30 மணிக்கு வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களின் தெரிவுக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் இ. போ. ச. விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெறவிருக்கின்றது. லிவகாகமம்வடக்குசன சமூகநிலையங்களின்'பி'பிரிவு கோஷ்டி 'ஈழநாடு' விளையாட்டுக் குழுவினருடன் மற்றோர் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வர்.

இவ்விரு ஆட்டங்களையும் வலி. வடக்கு தேசிய விளையாட்டுக் கழகங்களின்சம்மேளன விளையாட்டுப் போதனாசிரியர் திரு. வி. முருகையா ஒழுங்குசெய்துள்ளார்.

# பாதயாத்திரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன் நல்லூர் பஜனை சபையினர் எதிர்வரும் 10-ந் திகதி திருக்கேதீச்சரத்திற்கு மேற்கொள்ளவிருந்த பாத யாத்திரையை ஒத்திவைத்துள்ளனர்.

எதிர்பாராத மழையின் காரணமாகவே இதனை பின்போட்டுள்ளதாகவும், பாத யாத்திரை திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் விபரங்கள் அவிறிக்கப்படுமெனவும் பஜனை சபைக் காரியதரிசி திரு. ந. நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய முன்னனி கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம். புதன் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னனி கிளைக் கூட்டமொன்று திரு. கே. நடராசா தலைமையில் இன்று மந்துவிலில் நடைபெறவிருக்கிறது. கலவர வழக்குகளில் அமைக்கப்பட்ட தீர்ப்புகளை தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

# நெல்உற்பத்தியில் மாணவர்

சாவகச்சேரி, செவ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி ட்றிபேக்கல்லூரியைச் சேர்ந்த சுமார் 450 மாணவர்கள் சாவகச்சேரி தெற்கு கிராமசேவையாளர் திரு. வே. மார்க்கண்டு தலைமையில் இங்குள்ள நெல்வயல்களில்களை பிடுங்குகின்றனர்.

இம்மாதம் 5-ம்திகதிஆரம்பிக்கப்பட்ட களை பிடுங்கும் வேலை இம்மாதம் 9-ம் திகதி வரைநடைபெறவிருக்கிறது.

# இந்திய ஜனுதிபதிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

புதுடில்லி, நவ. 7 இந்திய ஜனுதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசெயினின் தெரிவு செல்லுபடியாகாதென தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை இன்று சுப்ரீம்கோர்ட்டு தள்ளுபடி செய்தது.

சட்டசபை சங்கத்தினர் 14 பேர் ஜனுதிபதியின் தெரிவுக்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல்செய்திருந்தனர்.

ஜனுதிபதியின் தெரிவு செல்லுபடியாகுமென்று தீர்ப்பளித்த நீதிபதி குறிப்பிட்ட ... தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

# அரிசி ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது

## ஆனுல் முன்னைய விலைக்கு இம்முறை சிறிது அதிகம்

கொழும்பு, செவ். இலங்கை-சீன, ரப்பர்-அரிசி பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தம் நேற்று மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்தம் நேற்று சீனத் தலைநகரான பீக்கிங்கில் கைச்சாத்தானது.

இந்த புதிய ஒப்பந்தத்தின்படி இப்போது சீனுவிடமிருந்து வாங்கும் அரிசிக்கு இலங்கை கொடுக்கும் பணத்தைவிட இனி ஒரு தொன் அரிசிக்கு பதினெரு பவுண் வரை கூடுதலாகக் கொடுக்க வேண்டியேற்படுமென அரசியல், வர்த்தக வட்டாரங்களில் கூறப்படுகிறது.

புதிய ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பில் வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பி- பீரிசும் சீனுவின் சார்பில் உதவிப் பிரதமர் திரு. லியு சியனும் கைச்சாத்திட்டனர்.

# பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

கொழும்பு, செவ்வாய் பகிஷ்கரிப்பிலீடுபட்டு வந்த கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் இன்று வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு பல்கலைக் கழகத்துக்குச் சென்றனர்.

கொழும்பு பல்கலைக் கழகம் என்ற பெயரைமாற்றி இலங்கைப் பல்கலைக் கழகம் எனப்பெயரிடப்பட்டு தமக்கு வழங்கப்படும் பத்திரங்களில் இப்பெயரே இருக்க வேண்டுமென அவர்கள் விடுத்திருந்த கோரிக்கைக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே இவர்கள் சில தினங்களாக நடத்திவந்த பகிஷ்கரிப்பைக் கைவிட்டு இன்று மீண்டும் சென்றனர்.

கொழும்பு பல்கலைக் கழகம் இனி இலங்கைப் பல்கலைக் கழகம் என வழங்கப்படும் என பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நேற்று பார்லிமெண்டில் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மருந்து பொருட்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், புதன் அரசாங்கத்துக்குச் சொந்தமானதென சந்தேகிக்கப்படும் சுமார் 800 ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை பொலிசார் கைப்பற்றினர்.

திருநெல்வேலி கிழக்கிலுள்ள ஒரு வீட்டிலிருந்தே பொலிசார் இப்பொருட்களைக் கைப்பற்றினர். கோப்பாய் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து இவ் வீட்டை நேற்றிரவு சோதனையிட்டபோது மருந்துக் குளிசைகள், ஊசிமருந்துகள் உட்பட அனேக மருந்துகளை பொலிசார் இங்கிருந்து கண்டுபிடித்தனர்.

பெண் சங்காணி ஒருவர் இதுசம்பந்தமாக பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார். [ந. நி.

## களைபிடுங்கினர்

கோப்பாய். செவ் கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி மாணவ மாணவிகளும் ஆசிரியர்களுமாக வயலுக்குச் சென்று களை பிடுங்கினர். இந்நிகழ்ச்சி வலிகிழக்கு, காரியாதிகாரி திரு, கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

## திருமலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிங்களத் தேர்ச்சிமட்டுமே அடிப்படைத் தகுதியாக இருக்கமாட்டாதென்றும் ஊழியர்களின் திறமைபற்றியும்,சேவைபற்றியும் ஆலோசிப்பதுகுறித்து ஆவனசெய்வதாகவும் பிரதமர் வாக்குறுதியளித்துள்ளார்.

வடபகுதியில்சமூகக்குறைபாடுகளை நீக்குவதுபற்றி திரு. பொன்னம்பலம் பிரதருடன் பேசுகையில் இந்தப் பிரச்னையில் அரசியல் தலையீடும் பலாத்காரப்பிரயோகமும்இருக்கக்கூடாதுஎன்று கருத்து வெளியிட்டார்.

கொழும்பு இந்துக்கல்லூரிக்கு அணித்தாய் உள்ள நிலத்தை அக்கல்லூரிக்கே பெற்றுக் கொடுப்பது குறித்துப் பிரதமர் உறுதியளித்துள்ளார்,

இதற்கிடையில் சிங்கள மொழிச்சட்டத்தினுல் வேலையிழந்துள்ள ஊழியர்களின் தூதுகோஷ்டியொன்று 19-ந் திகதி பிரதமரை சந்திக்கும் என்றும் அதற்கு திரு. பொன்னம்பலம் தலைமை வகிப்பர் என்றும் அறியப் படுகின்றது.

## மரண அறிவித்தல்

### மதியாபரணம் எமிலி முத்தம்மா

மதியாபரணம் எமிலி முத்தம்மா காலமாகிவிட்டார். இவர் எம். மதியாபரணத்தின் அருமை மனைவியும், கிருபை மதியாபரணம் (மானிப்பாய்), கண்மலர் மதியாபரணம் (பேராதனை பல்கலைக்கழகம்), அரியநேசன் மதியாபரணம் (மானிப்பாய்), திருமதி ரேஸ் பாமர் (சிரேஷ்ட கல்வி உத்தியோகத்தர், திருகோணமலை), திருமதி ராணி குட்டித்தம்பி (மானிப்பாய்) ஆகியோரின் அருமைத் தாயாருமாவர். ஈமக்கிரியைகள் இன்று மாலை 4-30 மணியளவில் நடைபெறும். 137

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org